# பொது ஏலம்

இலங்கை துணைத் தூதரகம்

சென்னை

மெர்சிடிஸ் பென்ஸ் கார் - Mercedes Benz E220d CDI ("அது உள்ள நிலையில்"), டி.வி.எஸ் எக்ஸ் எல் - TVS XL சூப்பர் டூ வீலர் (ஸ்கிராப்), பிற அலுவலகம் மற்றும் வீட்டு உபகரண பொருட்களுக்கான ஏலம்.

ஏலம் நடக்கும் தினம் : 27.07.2023 (வியாழன்) காலை 11.00 மணி.
இடம்: இலங்கை துணைத் தூதரகம். எண். 56, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034.

வாகனங்களை முன்பார்வையிடும் தேதி: ஜுலை 18 - 21, 2023 வரை மற்றும் இதர பொருட்களை பார்வையிட : ஜுலை 26 ஆம் தேதி
நேரம்: காலை 11 .00 முதல் மாலை 4 .00 மணி வரை

**மெர்சிடிஸ் பென்ஸ் கார் - Mercedes Benz E220d CDI ஏலம் தொடர்பான வழிமுறைகள்**

மாடல் : மெர்சிடிஸ் பென்ஸ்  - MERCEDES BENZ E 220 CDI
உற்பத்தி ஆண்டு: 2008
நாடு: ஜெர்மனி
நிறம்: அப்சிடியன் கருப்பு (Obsidian Black)
கன அளவு : 2200 (CC)

• சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம்  மேற்கண்ட வாகனத்தை "உள்ள நிலையில்"  (“as it is” condition) விற்கும்.

•வாகன ஆய்வு -  ஜூலை 18 - 21, 2023 வரை (காலை 11.00 முதல் மாலை 4.00 மணி வரை) மேற்கொள்ளலாம்.

• ஆரம்ப ஏல விலை அரசாங்க மதிப்பில் இருந்து தொடங்கும்.

•விற்பனை விலையில் 30% பணத்தைத் திரும்பப் பெற முடியாத வைப்புத் தொகையாக (Non-refundable Deposit) விற்பனையின் போது பணமாகச் செலுத்த வேண்டும்.

• 28/07/2023 அன்று மதியம் 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன் மீதம் உள்ள தொகையை செலுத்த வேண்டும்.

• 29/07/2023 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன் வாகனம் தூதரக வளாகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

•காரின்  உரிமத் தகட்டை (Diplomatic Licence plate) ரத்து செய்வதற்கான ஆவணத்தை தூதரகம் வழங்கும்.

• மறுபதிவு அல்லது மறு விற்பனையின் போது, வரி, காப்பீடு, அபராதம், முதலியன தொடர்பாக  விதிக்கப்படும்  கட்டணங்கள் வாகனம் வாங்குபவரால் ஏற்கப்பட வேண்டும்.

• ஸ்கிராப் (Scrap) ஏற்பட்டால், அனைத்துப் பொறுப்புகளும் வாகனம் வாங்குபவரால் ஏற்கப்பட வேண்டும்.

•வாகன விற்பனைக்குப் பிறகு சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம்  எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

•காரை வாங்குபவர் தற்போதுள்ள இந்தியச் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி சம்பிரதாயங்களைப் பின்பற்ற வேண்டும்.

• ஏலம் எடுத்தல், பணம் மற்றும் ஆவணம் சமர்ப்பித்தல், வாகன விற்பனையை முடிவு செய்தல் மற்றும் ஏலத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட அனைத்து இறுதி முடிவுகளும் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தால் எடுக்கப்படும்.

**டி.வி.எஸ் எக்ஸ் எல் - TVS XL Super இன் ஏலம் தொடர்பான வழிமுறைகள்**

• சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் மேற்கண்ட வாகனத்தை ஸ்கிராப்பாக (Scrap) விற்பனை செய்யும்.

•வாகன ஆய்வு ஜூலை 18 - 21, 2023 வரை (காலை 11.00 முதல் மாலை 4.00 மணி வரை) மேற்கொள்ளலாம்.

• ஆரம்ப ஏல விலை அரசாங்க மதிப்பில் இருந்து தொடங்கும்.

•வாகன விற்பனையின் போது 100% பணமாக செலுத்தப்பட வேண்டும்.

• அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு முன் வாகனம் தூதரக வளாகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

• ஏலம் எடுத்தல், பணம் மற்றும் ஆவணம் சமர்ப்பித்தல், வாகன விற்பனையை முடிவு செய்தல் மற்றும் ஏலத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட அனைத்து இறுதி முடிவுகளும் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தால் எடுக்கப்படும்.

**அலுவலகம் மற்றும் வீட்டு உபகரணங்களை ஏலம் விடுவது தொடர்பான வழிமுறைகள்**

• சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் அலுவலகம் மற்றும் வீட்டு உபகரண பொருட்களை ஸ்கிராப்பாக (Scrap) விற்கும்.

•பொருட்களை ஜூலை 26, 2023 அன்று (காலை 11.00 - மாலை 4.00 மணி வரை) ஆய்வு செய்யலாம்.

• ஆரம்ப ஏல விலை அரசாங்க மதிப்பில் இருந்து தொடங்கும்.

•பொருட்கள் விற்பனையின் போது 100% பணமாக செலுத்தப்பட வேண்டும்.

• அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு முன் பொருட்களை தூதரக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

• ஏலம் எடுத்தல், பணம் மற்றும் ஆவணம் சமர்ப்பித்தல், வாகன விற்பனையை முடிவு செய்தல் மற்றும் ஏலத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட அனைத்து இறுதி முடிவுகளும் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தால் எடுக்கப்படும்.

**ஏலத்தில் விடப்படும் பொருட்கள்**

01. டெஸ்க்டாப் கணினிகள் (Desktop Computers)
02. பிரிண்டர்கள்
03. மடிக்கணினி
04. ஃபேக்ஸ் இயந்திரம்
05. ஜெராக்ஸ் இயந்திரங்கள்
06. கெட்டில் (Kettles)
07. படுக்கைகள்
08. சிறிய பாத்திரங்கள்
09. குளிர்சாதனப் பெட்டிகள்
10. மொபைல் போன்கள்
11. அலுவலக நாற்காலிகள்
12. மேஜைகள்
13. அடுப்புகள் (Stoves)
14. சலவை இயந்திரங்கள் (Washing Machines)
15. மின்சார வெந்நீர் இயந்திரங்கள் (Geysers)
16. ஸ்டெபிலைசர்கள் (Stabilizers)
17. சுவர் விசிறிகள் (Wall Fans)
18. ஸ்பிளிட் ஏர் கண்டிஷனர்கள் (Split ACs)
19. யு.பி.எஸ் பேட்டரிகள்
20. ஸ்கிராப் வாகன பாகங்கள்
21. டயர்கள்
22. அகற்றப்பட்ட கட்டிட பொருட்கள் மற்றும் இதர பொருட்கள்